بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/10/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களைப் பற்றி கூறப்பட்டு வந்தது. அவரைப்பற்றி மீதமுள்ள விஷயங்கள் இன்றும் எடுத்துரைக்கப்படும். ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் சிரியாவிலுள்ள யர்மூக் பள்ளத்தாக்கில், யர்மூக் நதிக்கரையோரத்தில் ஒரு மிகப் பெரிய யுத்தம் நடைபெற்றது. ஏறக்குறைய இரண்டரை இலட்சம் படை வீரர்களை ரோமானியர்கள் போர்க்களத்தில் இறக்கியிருந்தார்கள். அவர்களுக்கெதிராக ஏறக்குறைய 30 ஆயிரம் முஸ்லிம்கள் இருந்தார்கள். அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபாக்கள் ஆயிரம் பேர் இருந்தார்கள். மேலும் அந்த ஆயிரம் பேர்களுள் பத்ர் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்கள் 100 பேர் இருந்தார்கள்.

ரோமானியர்களின் படைத் தளபதி இஸ்லாமிய படையை நோக்கி ஜார்ஜ் என்ற ஒரு ரோமானிய தூதுவரை அனுப்பி வைத்தான். அவர் இஸ்லாமிய படையை வந்தடைந்த நேரத்தில், முஸ்லிம்கள் மக்ரிப் தொழுது கொண்டிருந்தனர். முஸ்லிம்கள் பணிவு, உருக்கத்துடன் இறைவனுக்கு முன்னால் ஸஜ்தா செய்யும் காட்சியைக் கண்டு அவர் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானார். அவர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார். அதில் ஒன்று, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன? என்பதாகும். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் திருக்குர்ஆனுடைய வசனத்தை ஓதினார்கள். அதன் பொருள்:

"வேதத்தையுடையவர்களே! நீங்கள் உங்கள் மார்க்க (விஷய)த்தில் வரம்பு மீறாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர வேறெதனையும் கூறாதீர்கள். நிச்சயமாக மர்யமின் மகன் ஈஸா மஸீஹ் அல்லாஹ்வின் தூதரும், அவன் மர்யமுக்கு அருளிய அவனது நற்செய்தியுமாகும். மேலும் அவனிடமிருந்துள்ள ஓர் அருளுமாகும். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனுடைய எல்லாத் தூதர்களிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (கடவுள்) மூன்று எனக் கூறாதீர்கள். (அவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நல்லது. நிச்சயமாக வணக்கத்திற்குரிய ஒருவன் அல்லாஹ் மட்டுமே. அவனுக்கு மகன் உண்டு என்பது அவனது தூய்மைக்கு அப்பாற்பட்டது. வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை (எல்லாம்) அவனுக்கே உரியனவாகும். பாதுகாப்பாளனாக விளங்க அல்லாஹ்வே போதுமானவன்."

அதன் பிறகு இந்த வசனத்தை ஓதினார்கள்.

لَنْ يَّسْتَنْكِفَ الْمَسِيْحُ اَنْ يَّكُوْنَ عَبْدًا لِّلّٰهِ وَلَا الْمَلٰٓئِكَةُ الْمُقَرَّبُوْنَ

நிச்சயமாக மஸீஹும், நெருக்கமான வானவர்களும் அல்லாஹ்வின் ஓர் அடியாராக எண்ணப்படுவதை ஒருபோதும் அற்பமாகக் கருதமாட்டார்கள்.

ஜார்ஜ் அவர்கள் திருக்குர்ஆனின் இப்போதனைகளைக் கேட்ட போது, சந்தேகத்திற்கிடமின்றி ஈஸாவின் நற்பண்புகள் இவையே ஆகும் எனக் கூறினார். உங்களுடைய தூதர் உண்மையாளர் எனக் கூறி அவர் முஸ்லிமாகிவிட்டார்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கிறிஸ்தவ படையினருக்கும் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் நல்விளைவு ஒன்றும் ஏற்படவில்லை. மேலும் போருக்கான ஆயத்தப் பணிகள் துவங்கின. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு உணர்ச்சிப் பூர்வமான ஒரு சொற்பொழிவாற்றினார்கள். **அல்லாஹ்வின் அடியார்களே! இறைவனுக்கு உதவி புரிவதற்காக முன்னேறுங்கள். அவன் உங்களுக்கு உதவி புரிவான். உங்களுடைய பாதங்களுக்கு உறுதியை வழங்குவான். அல்லாஹ்வின் அடியார்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். பொறுமைதான் நிராகரிப்பிலிருந்து இரட்சிப்பு வழங்கக் கூடியதும், இறை விருப்பத்திற்கு காரணியாகவும், வெட்கமின்மையைக் கழுவக் கூடியதாகவும் உள்ளது. உங்களது வரிசைகளை முறித்து விடாதீர்கள். போரை நீங்கள் ஆரம்பிக்காதீர்கள். இறைவன் தன்னுடைய விருப்பத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு ஈட்டிகளை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். கேடயங்களை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இறை நினைவில் நாவுகளை மூழ்க விடுங்கள்** என்றார்கள்.

நிராகரிப்பாளர்களின் படை கடல் அலைகளைப் போன்று முன்னேறியது. ஆரம்பத்தில் ரோமானியர்களின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் முஸ்லிம்களை தள்ளிக்கொண்டு வர ஆரம்பித்தனர். அம்பெய்யக் கூடிய சிலரை ஒரு குன்றின் மீது நியமித்து, தமது அம்புகளினால் குறிப்பாக சஹாபாக்களை குறி வைக்குமாறு கிறிஸ்தவர்கள் கூறியிருந்தார்கள். பெரும் பெரும் மனிதர்கள் கொல்லப்பட்டு விட்டால், பிறகு மீதமுள்ள படையினரின் உள்ளம் தாமாகவே உடைந்து விடும்; அவர்கள் களத்தை விட்டு ஓடி விடுவார்கள் என்பதை எதிரிகள் அறிந்திருந்தார்கள். இதன் விளைவாக பல சஹாபாக்கள் கொல்லப்பட்டார்கள்; பலருடைய கண்களும் வீணாகி விட்டன. இந்நிலையை அபூஜஹ்லின் மகனாகிய இக்ரிமா அவர்கள் கண்டார்கள். சஹாபாக்கள் பெரும் தொண்டாற்றி விட்டனர். பின்னால் வந்த எங்களுக்கு நன்மையை பெறுவதற்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். நாங்கள் எதிர்படையின் மையப்பகுதியில் தாக்குதல் தொடுப்போம். மேலும் கிறிஸ்தவ தளபதிகளை கொன்று விடுவோம் என்று இக்ரிமா அவர்கள் விண்ணப்பித்தார். இது மிக அபாயகரமான விஷயமாகும். இவ்வாறு நடந்து கொண்டால், அங்கு செல்லக்கூடிய அனைத்து இளைஞர்களும் கொல்லப்பட்டு விடுவார்களே! என ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு இக்ரிமா அவர்கள், நீங்கள் கூறுவது சரிதான்! ஆனால் இதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லையே என்றார்கள். இறுதியில் அவரது வற்புறுத்தலின் காரணமாக அபூ உபைதா (ரலி) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அவர்கள் படையினுடைய மையப் பகுதியில் தாக்குதல் தொடுத்தார்கள். மேலும் அப்படையை தோற்கடித்தார்கள். ஆனால் அந்தப் போரில் அவர்களில் பெரும்பான்மையான இளைஞர்கள் ஷஹீதாகி விட்டார்கள். என்பதாயிரம் நிராகரிப்பாளர்கள் பின்னால் நகர்ந்து செல்லும் போது யர்மூக் நதியில் மூழ்கி இறந்து போனார்கள். ஒரு இலட்சம் ரோமானியர்களை போர்க் களத்தில் முஸ்லிம்கள் கொன்றனர். ஏறக்குறைய மூவாயிரம் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். இதுதான் யர்மூக் யுத்தமாகும்.

யர்மூக் போர் வெற்றிக்கு சில நாட்கள் முன்பு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் படைத் தலைமையை அபூ உபைதா அவர்களின் பொறுப்பில் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் அப்போது படைத் தளபதியாக இருந்தார்கள். முஸ்லிம்கள் வெற்றியடைந்த பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களின் படை ஈராக்கிற்கு திரும்பிச் செல்ல ஆயத்தமானது. புறப்பட தயாரான போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள்

மக்களைப் பார்த்து, இந்த சமுதாயத்தின் அமீன் - நம்பிக்கைக்குரியவர் உங்களுக்கு தலைவராக இருப்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், காலித் பின் வலீத் இறைவனுடைய வாள்களுள் ஒரு வாள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

சுருக்கமாக, இவ்வாறு நேசம் மற்றும் கண்ணியத்தின் சூழலில் இந்த இரு தலைவர்களும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தனர். **இதுவே நம்பிக்கையாளரின் இறையச்சமாகும்! பெயருக்காக ஆசைப்படவில்லை! புகழுக்கு ஆசைப்படவில்லை! அதிகாரம் மற்றும் பொறுப்புக்கு ஆசைப்படவில்லை! ஏதாவது நோக்கம் இருக்கும் என்றால் அது ஒன்றே ஒன்றுதான். இறை விருப்பம் கிடைக்க வேண்டும்; இறைவனுடைய ஆட்சி உலகில் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. இம்மக்களே நமக்கு அழகிய முன்மாதிரிகள் ஆவர். ஒவ்வொரு பொறுப்பாளரும், ஒவ்வொரு அஹ்மதியும் இவ்விஷயங்களை தமக்கு முன்னால் வைக்க வேண்டும்.**

சிரியா மக்கள் பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். மொழிகளும் வேறுபட்டதாக இருந்தது. அவர்களின் மரபுகளும் பல்வேறு வகையானதாக இருந்தன. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள், மக்களிடத்தில் நீதியையும் சமத்துவத்தையும் நிலை நாட்டினார்கள். அமைதியையும், நிம்மதியையும் மீண்டும் நிலை பெறச் செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் மார்க்க சுதந்திரத்தை வழங்கினார்கள். சிரியாவில் குடியமர்ந்த, கிரிஸ்தவ மார்க்கத்தை பின்பற்றக் கூடிய அரபு நாட்டினர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் முயற்சியினாலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்ட சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு தொடர்பிருந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் தலைமையில் இஸ்லாமிய படை பாலஸ்தீனத்தை நோக்கி முன்னேறியது. அவர்கள் பாலஸ்தீனத்தின் நகரங்களை வெற்றி கொண்ட பின், பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்ட நேரத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் படையும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது. கோட்டைக்குள் அடைபட்டிருப்பதால் சலிப்படைந்து கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு அடியெடுத்து வைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் அவர்கள் தாமே வந்து சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என நிபந்தனை வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கிறிஸ்தவர்களின் இந்த விருப்பத்தை ஹஸ்ரத் உமர் அவர்கள் வரை சென்றடைய வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் மதீனாவிலிருந்து புறப்பட்டு ஜாபியா என்ற இடத்தை அடைந்தார்கள். இது டமாஸ்கஸினுடைய சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களில் ஒன்றாகும். அங்கு தலைவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களை வரவேற்றனர். **எனது சகோதரர் எங்கே? என ஹஸ்ரத் உமர் அவர்கள் கேட்டார்கள். அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் யாரை குறிப்பிடுகிறீர்கள் என மக்கள் கேட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை நான் குறிப்பிடுகிறேன் என்று பதிலளித்தார்கள்.** ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் வந்து கொண்டிருப்பார்கள் என கூறப்பட்டது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஒட்டகத்தின் மீது சவாரி செய்து வந்தடைந்தார்கள். சலாத்தை தெரிவித்து விட்டு நலம் விசாரித்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் மற்ற அனைத்து மக்களையும் சென்று விடுமாறு கூறி விட்டார்கள். **ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுடன் அவருடைய தங்குமிடத்திற்கு சென்றார்கள். வீட்டை அடைந்த உடன் அங்கு ஒரு வாள், ஒரு கேடயம், ஒரு பாய் மற்றும் ஒரு குவளையைத் தவிர வேறு ஒன்றும் இல்லாததைக் கண்டார்கள். அபூ உபைதாவே! சில பொருட்களையும் சேர்த்து வைத்திருக்க வேண்டாமா? என ஹஸ்ரத் உமர் அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! இவை சொகுசின் பக்கம் நம்மை ஈர்த்து விடும் என்றார்கள்.**

இர்பாஸ் பின் சாரியா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் பிளேக்கால் நோய் வாய்ப்பட்ட போது, நான் அவர்களை சந்திக்கச் சென்றேன். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் என்னிடம், ''**எவர் பிளேக்கால் மரணிப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் வயிற்று நோயினால் மரணிப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் மூழ்கி இறப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் கூரை விழுந்து நசுங்கி இறப்பாரோ அவர் ஷஹீதாவார்**'' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு இறுதி நேரம் நெருங்கிய போது மக்களைப் பார்த்து, மக்களே! அல்லாஹ் ஆதமின் சந்ததிகளுக்கு மரணத்தை விதித்துள்ளான். ஒவ்வொருவரும் மரணிப்பார். **மரணத்திற்காக ஆயத்தமாக இருப்பவரும், அந்த நாளுக்காக ஆயத்தமாக இருப்பவரும் புத்திசாலியாவார்.** அமீருல் முஃமினீன் அவர்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். நான் அனைத்து அமானிதங்களையும் செலுத்தி விட்டேன்" என கூறி விடுங்கள் என்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், எனது தீர்மானத்திற்கேற்ப என்னை இங்கேயே அடக்கம் செய்து விடுங்கள் என்றார்கள். ஆகவே உர்தன் எனும் பிரதேசத்தில் பைஸான் எனும் பள்ளத்தாக்கில் அன்னாருடைய கபர் உள்ளது.

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹிஜ்ரீ 18 ஆம் ஆண்டில் 58 ஆவது வயதில் மரணமடைந்தார்கள். **ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் மரணமடைந்த போது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்கள் மக்களைப் பார்த்து, மக்களே! இன்று நம்மை விட்டு எவ்வாறான மனிதர் பிரிந்து சென்றுள்ளார் என்றால், அவரை விட தூய உள்ளம் கொண்டவரை, அப்பழுக்கற்ற ஒருவரை, மக்களை நேசிக்கக் கூடியவரை, மக்களின் நலம் விரும்பியை நான் கண்டதில்லை. அல்லாஹ் அவர் மீது தனது கருணைகளைப் பொழிய துஆ செய்யுங்கள் என்றார்கள்.**

**ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள் தம் தோழர்களிடம் என்னுடைய விருப்பம் என்னவென்றால், இந்த வீடு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் சாலிம் மவ்லா அபூ ஹுதைஃபா மற்றும் ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் போன்ற மக்களால் நிரம்பி இருக்க வேண்டும் என்றார்கள்.**

**இம்மக்கள் எத்துனை நற்பேறு பெற்றவர்கள்! இவர்கள் இவ்வுலகிலும் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறக் கூடியவர்களாக இருந்தார்கள்; மறுமையிலும் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.** இவர்களை பற்றிய நற்குறிப்பு (இத்துடன்) இன்று முடிவடைகிறது.

சில ஜனாஸாக்களை தொழ வைப்பேன். அவர்களில் ஒருவர் ஷஹீது ஆவார். அவர் **பிஷாவரைச் சார்ந்த ஃபஸ்ல் தீன் சாஹிபுடைய மகனாகிய பேராசிரியர், டாக்டர். நயீமுத்தீன் கட்டக் சாஹிப் ஆவார்கள். அக்டோபர் 5 ஆம் தேதி எதிரிகளால் சுடப்பட்டு ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள்.** இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். ஷஹீதின் வயது 56 ஆகும். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவருடைய உறவினர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக.

அதன் பிறகு ஹுஸூர் அவர்கள், ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் மாணவரான மதிப்பிற்குரிய உஸாமா சாதிக் சாஹிப் மற்றும் ஜாமிஆ அஹ்மதிய்யா U.K வின் ஆசிரியர் மதிப்பிற்குரிய சலீம் அஹ்மது மலிக் சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மர்ஹூம்களின் பாவ மன்னிப்பிற்காக துஆ செய்தார்கள். தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன் என்று கூறினார்கள்.

*(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)*